IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 43/2009

Deposition of Witness : DW 2

Name : முனிரத்தினம் (வயது – 70)

Father's Name /W/o : த/பெ பட்டாபி

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : மேல்பாக்கம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 06.10.2025.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

13.02.1990 தேதியிட்ட 9 ஆம் பிரதிவாதி அருணாச்சலம் என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ – 3 ஆகவும், 22.11.2010 தேதியிட்ட 1 ஆம் பிரதிவாதி நாகரத்தினம்மாளிடம் 9 ஆம் பிரதிவாதி கிரையம் பெற்ற கிரைய பத்திர சான்றிட்ட நகல் பி.சா.ஆ – 4 ஆகவும், 22.11.2010 தேதியிட்ட 1 ஆம் பிரதிவாதி நாகரத்தினம்மாளிடம் 9 ஆம் பிரதிவாதியின் மகன் நந்தகோபாலுக்கு எழுதி வைத்த கிரைய பத்திர சான்றிட்ட நகல் பி.சா.ஆ – 5 ஆகவும், அசல் வழக்கு எண்.103/1995 வழக்கில் பிறப்பித்த தீர்ப்புரை சான்றிட்ட நகல் பி.சா.ஆ – 6 ஆகவும், ஏ.எஸ்.23/2015 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல் பி.சா.ஆ – 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (பி.சா.ஆ 3 முதல் 5 ஆவணங்களின் அசல் 9 ஆவது பிரதிவாதியிடம் தான் உள்ளது. எனவே சான்றிட்ட நகல் தாக்கல் செய்ய இயலாது என்று வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

**(வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**